# "இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தின் பாடநெறிகள் தொடர்பான மனோநிலை" - இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நான்கு பீடங்களின் மூன்றாம் வருட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களை மையப்படுத்திய ஆய்வு

**ML.Mohamed Helfan(1), S.M.M. Mazahir(2), A.H.M. Isfar(3), J. Safiya(4) , Y. Rinoshiya(5)**

[1]Department of Islamic Studies, Faculty of Islamic Studies & Arabic Language, SEUSL

[2] Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka

[3] Faculty of Engineering, South Eastern University of Sri Lanka

[4&5] Department of Islamic Studies, Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அமையப் பெற்றுள்ள பீடங்களில் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்திற்கு தனிச்சிறப்புண்டு. இவ்வகையில் இப்பீடம் வழங்குகின்ற பாடநெறிகளின் பெறுமானம் மற்றும் அப்பாடநெறிகள் தொடர்பான மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் மனோநிலை யாது என்பதைக் கண்டறிவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. பண்பு மற்றும் அளவு ரீதியில் அமைந்த இவ்வாய்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஆறு பீடங்களுள் பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழிநுட்ப பீடம் தவிர்ந்த ஏனைய நான்கு பீடங்களின் மூன்றாம் வருட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் அடங்களாக மொத்தம் 300 பேர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் வழங்கும் பாடநெறிகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பரந்துபட்டதாகவும் தொழில் சந்தை எதிர்பார்க்கின்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் அதற்கு மேலாக இஸ்லாமிய அறிவை பாரியளவில் வழங்குவதாகவும் காணப்பட்ட போதிலும் 04 பீடங்களைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் இது தொடர்பான மனோநிலை வித்தியாசமாக அமைந்துள்ளது. இங்குள்ள பாடநெறிகளைக் கொண்டு தொழில் வாய்ப்பினைப் பெறமுடியாதுள்ளதோடு, வெறும் இஸ்லாமிய விடயங்களே கற்பிக்கப்படுகின்றது என விமர்சிக்கப்படுகிறது. இருப்பினும் இத்தாழ்வு மனோநிலைக்கு புள்ளி நிர்ணயம் Z. Score, தொழில்வாய்ப்பு பெறுவதில் காலதாமதம், இத்துறைசார் ஆசிரியர் நியமனம், மௌலவி சான்றிதழ் தகைமைகளாகக் கொள்ளப்படல் போன்ற வெவ்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. உண்மையில் இப்பீடம் வழங்கும் பாடத்திட்டம் தொழில் சந்தைக்கு ஏற்புடையது. அதனை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. பாடத்திட்டத்தில் உள்ள குறைபாடு அன்றி, நாட்டில் தொழில் இன்மையே குறைபாடாக அமைந்துள்ளது. ஆகவே, இவ்வாய்வு இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம் வழங்கும் பாடத்திட்டம் பற்றிய பூரண அறிவைத் தருவதாகவும் எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம், பாடநெறிகள், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

## ஆய்வு அறிமுகம்

இலங்கையின் தேசிய கல்விக் கொள்கையின் கீழ் ஏராளமான உயர்கல்வி நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒன்றாக பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. இதனடிப்படையில் பல்கலைக்கழக கல்வி முறைமை மற்றும் பாடத்திட்டம் பற்றி பரவலாக பேசப்படுகின்றது. இன்றைய பல்கலைக்கழகக் கல்வி முறைமை மாணவர்களின் எதிர்கால நிலைபேற்றினை ஒளிமயமாக்குமா அல்லது அதற்கு எதிர்மறையான போக்கினைக் கொண்டுள்ளதா என்ற வினா சமுகத்தின் சமகால பேசுபொருளாக மாறியுள்ளது. பல்கலைக்கழகத்தில் இயங்கும் அனைத்து பீடங்களும் ஒரே சமத்துவ நோக்கில் பார்க்கப்பட வேண்டும் என்பதே இவ்வாய்வின் அடியூற்றாகும்.

அவ்வகையில் இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் வைத்து நோக்குகையில் எமது ஆய்வின் களமாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் காணப்படுகின்றது. இலங்கையின் 10ஆவது தேசிய பல்கலைக்கழகமான இது, கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது. இக்கரையோரப் பிரதேசம் கொழும்பிலிருந்து 350km தூரத்தில் அமைந்துள்ளது. இது முஸ்லிம் காங்கிரஸின் நிறுவனரும் முன்னால் அமைச்சருமான மர்ஹூம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் முயற்சியினால் 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பல்கலைக்கழகக் கல்லூரியாக 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.[14]

பின்னர் 1996ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி சுயாதீன பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டது. இதன்படி இப்பல்கலைக்கழகம் கலை மற்றும் கலாசார பீடம், வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம், பொறியியல் பீடம், தொழில்நுட்ப பீடம் என ஆறு பீடங்களையும் 21 திணைக்களங்களையும் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் மாத்திரமே இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிக்கென்ற தனித்துவமான பீடத்தினைக் கொண்டுள்ளது. ஏனைய பல்கலைக்கழகங்களில் இஸ்லாம் மற்றும் அறபு சார்ந்த கற்கைக்கான திணைக்களங்கள் மாத்திரமே காணப்படுகிறன.

இவ்வகையில் இப்பல்கலைக்கழகத்தில் உள்ள ஆறு பீடங்களில் ஒன்றான இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம் 2005ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இப்பீடத்தின் வளர்ச்சியைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் மிகச்சிறிய கட்டிடமே அதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. காலவோட்டத்தில் குவைட் நிதித் திட்டத்தின் கீழ் இப்பீடத்தின் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது. தற்போது இப்பீடம் 1100இற்கும் மேற்பட்ட மாணவர்கள், 25 இற்கும் மேற்பட்ட விரிவுரையாளர்கள், 5 கலாநிதிப்பட்டம் முடித்த விரிவுரையாளர்கள் என இப்பீடம் சிறந்ததொரு நிலையினை அடைந்திருக்கின்றது. இங்கு வருடாந்தம் 400இற்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு இஸ்லாமிய கற்கைகள் துறை மற்றும் அறபு மொழித் துறை என்ற இரண்டு துறைகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இஸ்லாமிய கற்கைகள் துறை, இஸ்லாமிய நாகரிகம், இஸ்லாமிய வங்கி முறைமை மற்றும் இஸ்லாமிய சட்டம் என்ற பிரத்தியேகமான பாட உள்ளடக்கத்தையும் அதே நேரம் அறபு மொழித்துறையானது அறபு மொழி, மொழியியல், மொழி பெயர்ப்பு மற்றும் அறபு இலக்கியம் போன்ற பாட நெறிகளையும் கொண்டுள்ளது. இவற்றில் பொது மற்றும் விஷேட பட்டத்தினை பூர்த்தி செய்யும் வாய்ப்புமுள்ளது.

[14]**www.Seu.ac.lk**

இங்கு இஸ்லாமிய சமயம் சார் கற்கை நெறிகள் தவிர நேரடியாக சமயம் சாராத பாட நெறிகளும் போதிக்கப்படுகின்றன. இருந்தபோதிலும் இப்பீடத்தின் பாடநெறிகள் தரமற்றவை என்றும் இது இஸ்லாமிய சமய வளர்ச்சிக்கான களம், இங்கு ஜிஹாதுக்குரிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்ற தவறான கருதுகோல்கள் பிறசமூகங்களின் மத்தியிலும் கல்விமான்கள் மத்தியிலும் காணப்படுகின்றன. இவற்றை மையப்படுத்தி இதுவரையும் இப்பீடத்தின் பாடநெறிகள் தொடர்பான எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாமையினால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே,இப்பீடத்தின் கற்கை நெறிகள் தொடர்பான பூரண தெளிவினை வழங்கி, அவை பற்றிய விமர்சனங்களை நீக்குவது இவ்வாய்வின் எதிர்பார்ப்பாகும்.

**ஆய்வுப் பிரச்சினை (**

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீடம் வழங்கும் பாடநெறி தொடர்பானவிமர்சனப் பார்வை இப்பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் வழங்கும் பாடநெறிகளின் பெறுமானத்தைக் தெளிவுபடுத்தல்
2. இப்பாடநெறிகள் தொடர்பான 04 பீடங்களின் மூன்றாம் வருட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் மனோநிலை மற்றும் அதற்கான காரணத்தை கண்டறிதல்

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு அளவு மற்றும் பண்புசார் அடிப்படையில் காணப்படுவதோடு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்டமைந்துள்ளது. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உள்ள இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம், கலைகலாசார பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம் மற்றும் பொறியியல்பீடம் ஆகியவைகளைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் 300 பேர்களிடம் வினாக்கொத்துகள் வழங்கப்பட்டு, இதுதொடர்பான தரவுகள் பெறப்பட்டன. மேலும் இரண்டாம் நிலைத்தரவுகளும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்தினூடாகப் பெறப்பட்ட தரவுகள் Microsoft Office Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**கண்டறிதல்களும் கலந்துரையாடலும்**

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் வழங்கும் பாடநெறிகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பரந்துபட்டதாகவும், தொழில் சந்தை எதிர்பார்க்கின்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும், அதற்கு மேலாக இஸ்லாமிய அறிவை விரிவாக வழங்குவதாகவும் காணப்படுகின்றன.

Arabic, Tamil, English, Sinhala என்ற மொழி சார்ந்த பாடங்களையும் Sociology, Political Sciences, Critical Thinking, Social Harmony, Educational Psychology, Social Problem And Society, Islamic Criminal Justice என்ற சமூகவியல்சார்ந்த பாடங்களையும் Accounting, Economics, Islamic Banking & Finance, Basic Mathematics, Statistic Data Analysis போன்ற நிதித்தறை சார்ந்த பாடங்களையும் Human Resource Management, Principles of Management, Career Development, Research Methodology என்ற திறன் அபிவிருத்தி தொடர்பான பாடங்களையும் பொதுக் கலைமானிப் பட்டத்திற்காக இப்பீடம் வழங்குகின்றது.

அத்தோடு விசேட பட்டங்களையும் அதற்குப் பொருத்தமான பாடவிதானங்களையும் இப்பீடம் கொண்டுள்ளது. அதன்படி இஸ்லாமிய சிந்தனை மற்றும் நாகரிகம் (Islamic Thought & Civilization), இஸ்லாமிய சட்டத்துறை மற்றும் சட்டவியல் (Islamic Law and Legislation), இஸ்லாமிய வங்கியல் மற்றும் நிதியியல் (Islamic Banking & Finance), அறபு மொழி மற்றும் இலக்கியம் (Arabic Language & Literature), மொழியியல் மற்றும் மொழி பெயர்ப்பு (Linguistic & Translation) போன்ற பிரிவுகளில் விசேட பட்டத்தினையும் வழங்குகின்றது. இப்பாடத்திட்டங்கள் சர்வதேச ரீதியானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள விரிவுரையாளர்களில் 12 பேர் தங்களின் உயர்கல்வியை புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சட்டத்துறை, இஸ்லாமிய வங்கியல் மற்றும் நிதியியற்துறை, இஸ்லாமிய கற்கை என்ற துறைகளில் மேற்கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். அத்தோடு 2017ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட Programme Review இல்

இப்பீடத்திற்கு C தரம் கிடைத்தமையும் இப்பீடத்தின் பாடத்திட்டத்தின் அங்கீகாரத்துக்கு சான்றாக உள்ளது. அத்தோடு இப்பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்ப பாடம் மூன்று வருடத்திற்கும் கட்டாய பாடமாக உள்ளதால் அதனூடாக தொழில் பெற்றவர்களும் உள்ளார்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்க அம்சமாகும்.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் பாடநெறிகள் தொடர்பான மனோநிலை விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் தாழ்வாக காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள் சமகாலத்தில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தின் தேவை, அங்கு வழங்கப்படும் கற்கை நெறியில் திருப்தி நிலை, அதன் விசேட, சாதாரண பட்டம் பற்றிய மனப்பதிவு, தொழிற்சந்தையில் அதன் நிலை போன்றவற்றை மையப்படுத்தி மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் மனோநிலை வினாக்கொத்தினூடாக மதிப்பிடப்பட்டது.

இவ்வகையில் இப்பீடத்தின் கற்கை நெறி தொடர்பாக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் திருப்தி நிலை இவ்வாறு காணப்பட்டது.

அட்டவணை 01 (மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு)

| **கற்கை நெறியில் திருப்தி நிலை** | **மாணவர் எண்ணிக்கை** |
|---|---|
| திருப்தி | 40 |
| ஓரளவு திருப்தி | 61 |
| திருப்தியின்மை | 89 |
| குறைபாடு | 110 |

மேற்காட்டப்பட்ட அட்டவணையின் படி இப்பீடத்தில் உள்ள கற்கை நெறி தொடர்பான மனோநிலையில் திருப்தி கொண்டோர் 40 பேரும், ஓரளவு திருப்தி 61 பேரும், திருப்தியின்மை 89 பேரும், குறைபாடு எனக்கூறியோர் 110 பேருமாகக் காணப்படுகின்றார்கள். இதன்படி 40 மானவர்கள் திருப்தி கொண்டுள்ள போதிலும் அதிகமானோரின் மனோநிலை இக்கற்கை நெறி குறைபாடுடையது என்பதைக் காட்டுகின்றது.


இதற்குப் பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்திற்கு குறைந்த Z புள்ளிகள் பெற்ற மாணவர்களை உள்வாங்குதல் மிகப் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது. குறைந்த Z புள்ளி ஓர் காரணமாக சொல்லப்படுகின்ற போதிலும்

கூடிய Z புள்ளி கொண்ட மாணவர்களும் இக்கற்கை நெறியை தெரிவு செய்துள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கும் கற்கை நெறியில் திருப்தி காணாமைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

மேலும் இஸ்லாமிய சட்டம், இஸ்லாமிய வங்கி முறைமை தொடர்பான பாடம் பொது கற்கையைத் தொடரும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது. அடுத்தடுத்த ஆண்டுகளில் அப்பாடம் நிறுத்தப்பட்டு இரண்டு இஸ்லாம் சார்ந்த பாடங்களே வழங்கப்படுகின்றது. இதனால் இவை பட்டச்சான்றிதழில் ஒரு பாட நெறியாக இருந்த போதிலும் அது எவ்வித பயனுமற்றதாக காணப்படுகின்றது. ஏனெனில் தொழிற்சந்தையில் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு ஒரு பாட நெறியை மூன்றாண்டுகள் கற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் இது குறிப்பிடத்தக்க பெறுமதியை வழங்குவதில்லை என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட வினாக்கொத்தினை பகுப்பாய்வு செய்ததற்கு அமைவாக இப்பீடத்தில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த பின்னர் தொழில்வாய்ப்பு பெறுவது தொடர்பான மனோநிலையை மாணவர்கள், விரிவுரையாளர்கள் பின்வருமாறு வெளிக்காட்டியுள்ளார்கள். இதனை பின்வரும் வரைபடம் காண்பிக்கின்றது.

வரைபடம் 01





(மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு)

இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின்னர் தொழில்வாய்ப்பு கிடைக்கும் என 25% மானோரும், கிடைக்காது என 11% மானோரும், காலதாமதமாகும் என 64% மானோரும் குறிப்பிடுகின்றனர். தொழில்வாய்ப்பு கிடைக்கும் ஆனால் காலதாமதம் ஏற்படும் எனக் குறிப்பிடுவோர் அதிகமானோராகக் காணப்படுகின்றனர். இதற்கான காரணமாக இப்பீடத்திலிருந்து வெளியாகிய மாணவர்கள் இன்னும் தொழில்வாய்ப்பை பெறாமல் இருக்கின்றனர் எனக் கூறுகின்றனர். உண்மையில் இக்கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதொன்றாகும். ஏனெனில் ஏனைய பீடங்களிலிருந்து வெளியாகிய மாணவர்களும் தொழில்வாய்ப்பைப் பெறாமல் இன்றுவரை இருக்கின்றனர். தொழில் வாய்ப்பு பெறுவதில் காலதாமதம் என்பது இன்றைய பட்டதாரிகளின் பொதுப் பிரச்சினை என்பது அனைவரும் அறிந்ததே. உண்மையில் தொழில் கிடைக்காதது என்பது இப்பீடத்தின் பாடத்திட்டத்தில் குறைபாடு அல்ல மாறாக நாட்டில் தொழில் இன்மையே குறைபாடாக அமைந்துள்ளது. அது மட்டுமல்லாது இப்பீடத்திலிருந்து வெளியாகிய குறிப்பிடத்தக்க மாணவர்கள் தொழில்வாய்ப்பை பெற்றுள்ளதையும் காணமுடிகிறது.

இப்பீடம் வழங்கும் கற்கைநெறிகள் மற்றும் தொழில் வாய்ப்பு தொடர்பான விடயங்களில் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் திருப்தியற்ற நிலையில் காணப்பட்ட போதிலும் பல்கலைச் சூழலில்

இஸ்லாமிய கற்கை மற்றும் அறபு மொழிப் பீட உருவாக்கம், அதன் எதிர்காலத்தேவை என்பன தொடர்பான மனோநிலை இவ்வாறு காணப்படுகின்றது. இதன்படி

வரைபடம் 02





(மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு)

அதிகமானவர்கள் (46.66%) இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாத்திரம் இப்பீடம் போதுமானது என்றும் அதற்கு அடுத்த இடத்தில் உள்ளோர் (26.66%) இப்பீடம் ஏனைய பல்கலைக்கழகத்திலும் அமைக்கப்பட வேண்டும் என்றும் கருதுகின்றனர். அதற்கு அவர்கள் பின்வரும் காரணத்தை முன்வைக்கின்றனர். ஏனெனில் இப்பீடம் பல்கலைக்கழக பாடநெறியோடு இணைந்து வாழ்க்கைக்குத் தேவையான இஸ்லாமிய வழிகாட்டலையும் வழங்குகின்றது. எனவே, இவ்வாறான பீடம் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் உருவாக்கப்படுமாயின் சிறந்ததொரு பண்பாட்டுடன் கூடிய உயரிய சமூதாயத்தினை எதிர்காலத்தில் காண முடியும். இப்பீடம் அவசியம் என்று (16.66%) வீதமானவர்களும் இது அவசியமில்லை என்று (10%) வீதமானவர்களும் கருதுகின்றார்கள்.

இஸ்லாமிய மற்றும் அறபு மொழிப் பீடம் சிறப்பு மற்றும் பொதுப் பட்டங்களை வழங்குகின்றது. இப்பட்டச்சான்றிதழ் தொடர்பான மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் மனோநிலையை பின்வரும் வரைபடம் தெளிவுபடுத்துகின்றது.

வரைபடம்: 03




(மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு)

இவ்வரைபடத்தை நோக்குகின்ற போது சிறப்பு பட்டத்தினை விட பொதுப் பட்டம் சிறந்தது என்று அதிகமானவர்கள் (56%) கூறுகின்றனர். இந்த மனோபாவம் பெரும்பாலும் மாணவர்கள் மத்தியிலேயே காணப்படுகின்றது. எனினும் விரிவுரையாளர்கள் தரப்பில் (21%) சிறப்புப் பட்டம் சிறந்தது என்ற மனப்பதிவுள்ளது. இருப்பினும் இரு பட்டச்சான்றிதழ்களும் சிறந்தன என (13%) வீதமானவர்களும் இரு பட்டச்சான்றிதழ்களும் பயனற்றவை என்ற மனப்பதிவை (10%) வீதமானவர்களும் கருதுகின்றனர்.

**முடிவுரை**

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கே தனித்துவமான பீடமான இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் மூலம் வழங்கப்படும் பாடநெறிகள் தொடர்பில் மேற்கொண்ட இவ்வாய்வின் படி விரிவுரையாளர் மற்றும் மாணவர் தரப்பில் அதிகமான விமர்சனங்கள் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான பீடத்தின் தேவை இன்றைய பல்கலைச்சூழலில் காணப்படுகின்ற போதிலும் அங்குள்ள ஒரு சில கற்கைநெறிகளின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக இஸ்லாமிய கற்கை துறையில் கவனம் செலுத்த வேண்டியுள்ளமை காலத்தின் தேவையாகும். அத்தோடு இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் தொழில்வாய்ப்பை பெறமுடியாமைக்கு இப்பீடத்திலுள்ள பாடநெறிகள் தான் காரணம் என்ற விமர்சனம் ஏற்றுக்கொள்ள முடியாதொன்றாகும். ஏனெனில் ஏனைய பீடங்களிலிருந்து வெளியாகும் மாணவர்களும் தொழில்வாய்ப்பை பெறாமல் இன்றுவரை இருப்பதைக் காண முடிகிறது. எனவே, தொழில்வாய்ப்பைப் பெற முடியாமைக்கு இஸ்லாமிய கற்கைநெறி ஒரு காரணமல்ல. மாறாக முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் இந்நாட்டில் இத்துறைசார்ந்த அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே, இஸ்லாமிய துறைசார்ந்த பட்டதாரிகள் இப்பீடத்தின் மூலம் உருவாக்கப்படுவதனால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில்வாய்ப்பு பெறுவதென்பது கடினமாக உள்ளது. இருப்பினும் வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் இப்பீடத்தின் மூலம் பட்டம் முடித்தவர்களுக்கு ஏராளமான தொழில்வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவ்வாறான நாடுகளுக்கு சென்று தொழில் புரிவதன் மூலம் தொழில்வாய்ப்பு இல்லை என்ற விமர்சனத்தைக் குறைக்க முடியும். எனவே, இப்பீட கற்கைநெறியில் குறையுள்ளது என்பதை விட நம் நாடு அதன் தரத்திற்கேற்ற வேலைவாய்ப்பினைக் கொண்டிருக்கவில்லை என்பதே அதன் உண்மை நிலையாகும்.

**பரிந்துரைகள்**

- ✓ இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் மூலம் வழங்கப்படும் கற்கைநெறிகள் தொடர்பான பூரண தெளிவினை வழங்குவதன் ஊடாக தவறான மனோநிலையை மாற்றியமைக்க முடியும்.
- ✓ இவ்வாய்வின் மூலம் அடையாளம் கண்ட (இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழித் திணைக்களங்களில் உள்ள) குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் மூலம் தற்கால தொழிற் சந்தைக்குப் பொருத்தமான பட்டதாரிகளை உருவாக்க முடியும்.
- ✓ குறைந்த Z புள்ளியின் மூலம் அதிகமான மாணவர்கள் இப்பீடத்தில் உள்வாங்கப்படுகின்றார்கள் என்ற விமர்சனத்தை தடுப்பதற்கு மிகக்குறைந்த Z புள்ளியைக் கொண்ட மாணவர்களை உள்வாங்குவதை குறைப்பதன் மூலம் இப்பீடத்தின் தரத்தினை உயர்த்த முடியும்.
- ✓ இப்பீடத்தில் இஸ்லாமிய கற்கை நெறியை தெரிவு செய்த மாணவர்கள் தொழிற்சந்தைக்குச் செல்லும் போது அல்ஆலிம், மௌலவி சான்றிதழ் கேட்கும் நிலை காணப்படுகின்றது.

இந்நிலையை மாற்றியமைப்பதன் மூலம் இம்மாணவர்களும் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

**உசாத்துணைகள்**


1. வரலாறு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,[online] available http://www.seu.ac.lk/Overview.php accessed 10.06.2018
2. பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், [online] available http://www.mohe.gov.lk accessed 10.06.2018
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, **Departments,** இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், [online] available http://www.ugc.ac.lk accessed 10.06.2018
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, **UNDERGRADUATECOURSES,** இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், [online] available http://www.ugc.ac.lk accessed 10.06.2018